# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 249 ஆங்கீரச ஆடி 27 (11.08.1992) செவ்வாய்

★ ரூபவாஹினியில் அதிகாரிகளின் மரணசடங்கு

## பீரங்கி வண்டிகளில் சடலங்கள் ஹெலியிலிருந்து மலர் வீச்சு

நேற்று கொழும்பு, குருநாகலை, நீர்கொழும்பு பகுதிகளில் இராணுவ உயர் அதிகாரிகளின் மரண சடங்குகளை ரூபவாஹினி முழுமையாக ஒளிபரப்பியது. அதிகாரிகளின் சடலங்கள் பீரங்கி வண்டிகளில் வைக்கப்பட்டு மயானங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. முப்படைகளினது அணி வகுப்பு, இறுதி மரியாதை வேட்டுகள் என்பனவும் நிகழ்த்தப்பட்டன. கொப்பேகடுவவின் சடலம் கனத்தை மயானத்தில் நுழைந்தபோது ஹெலிகப்டரிலிருந்து மலர் தூவப்பட்டது. மரணச் சடங்குகளை முன்னிட்டு கொழும்பில் கட்டப்பட்டிருந்த சுலோகங்களும் பதாதைகளையும் ரூபவாஹினி ஒளிபரப்பியது. மரணச் சடங்குகள் — 4ஆம் பக்கம் பார்க்க

# கனத்தை மயானத்தில் அமைச்சர்கள் மீது ஆத்திரமடைந்த மக்கள் தாக்குதல்

## பாதுகாப்புகருதி ஜனாதிபதிகலந்து கொள்ளவில்லை இராணுவ அதிகாரி இறுதிச் சடங்கில விபரீதம்

கண்ணி வெடியில் பலியான உயர் இராணுவ அதிகாரிகளின் மரணச்சடங்குகள் நேற்று நடைபெற்றபோது ஆத்திரமடைந்த சிலர் மரணச்சடங்கில் கலந்து கொண்ட அமைச்சர்கள் மீது தாக்குதல் நடத்தினர். அரசுக்கு எதிராக கூச்சலிட்டு கோஷங்கள் எழுப்பினர். இதனால் அமைச்சர்கள் சிலர் மரணச்சடங்கு வைபவங்களிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. பாதுகாப்பு கருதி ஜனாதிபதி பிரேமதாஸா இராணுவ அதிகாரிகளின் மரணச் சடங்குகளில் கலந்து கொள்ளவில்லை என பி.பி.ஸி தெரிவித்தது.

கனத்தை மயானத்தில் நடந்த கொப்பேகடுவவின் தகனக்கிரியை முடிவடைந்ததும் மயானத்தில் நின்றிருந்த இளைஞர்களும் சில பெண்களும் இளம் பிக்குகளும் மரணச் சடங்கில் கலந்து கொண்ட 3 முக்கிய அமைச்சர்களை நோக்கி கூச்சலிட்டவாறு செங்கட்டிகளாலும், ஓடுகளாலும் வீசினர்.

இதனால் அமைச்சர் ஒருவரின் கழுத்தில் காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்ததாக பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

இவ்வமைச்சரை நோக்கி மக்கள் கும்பல் நெருங்கி வந்தபோது அவர்களை மேலும் நெருங்காது அமைச்சரின் மெய்க்காவலர்கள் விண்ணை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதைத் தொடர்ந்து கலகம் அடக்கும் பொலிஸாரும் இராணுவப் பொலிஸாரும் கனத்தைக்கு அழைக்கப்பட்டனர்.

### ● பூரண இராணுவ அணிவகுப்புடன்
## கொப்பேகடுவ சடலம் கனத்தையில் தகனம்

கடந்த சனியன்று கண்ணி வெடியில் கொல்லப்பட்ட வடபகுதி இராணுவ உயரதிகாரிகளின் மரணச் சடங்குகள் நேற்று நடைபெற்றன.

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் சடலம் நேற்றுமாலை 5 மணியளவில் கனத்தைமயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவரின் இறுதிச்சடங்கில் பெருமளவில் சிங்களவர்கள் கலந்து கொண்டனர்.

லெப். கேணல் ஆரியரத்ன, லெப். கொமாண்டர் அசங்க திலகரட்ன ஆகியோரின் மரணச்சடங்குகள் பிற்பகல் கனத்தையில் இடம்பெற்றன.

லெப். கேணல் ஆரியரத்ன

... 4 ஆம் பக்கம் பார்க்க

## விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் நடாத்தப்படும் மாவீரர் தடகள விழா (தியாகி திலீபன் நினைவுக்கேடயத்திற்கானது) வை ஒட்டிய ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி ஆகியவற்றுக்கான

## தம்புல்லவில் கட்டிடங்களுக்கு

## பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சி 20தமிழர்கள் படையினரால்கைது

கடந்த சனியன்று புலிகளின் கண்ணி வெடியில் சிக்கிய 9 உயர் இராணுவ அதிகாரிகள் பலியான செய்தி கேட்டு திருமலையில் பாலையூற்று பகுதி மக்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

இதையறிந்த படையினர் பாலையூற்றுப் பகுதியை சுற்றி வளைத்து 20 தமிழ் மக்களை கைது செய்து கொண்டு சென்றனர்.

## ஹேமா தலைமை

கடந்த சனிக்கிழமை கண்ணி வெடியில் சிக்கி மரணமான இராணுவ உயர் அதிகாரிகளின் நினைவாக இன்று ஜனாதிபதி மாளிகையில் மத நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

திருமதி ஹேமா பிரேமதாஸ தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் பௌத்த குருமாருக்கு அன்னதானம் வழங்கப்படும்.

முப்படைகளின் அதிகாரிகள் பொலிஸ்மா அதிபர் மற்றும் பலர் இதில் கலந்து கொள்வர்.

## 50 தமிழர் சுட்டும் வெட்டியும் புன்னாணைப் பகுதியில் கொலை

மட்டக்களப்பு - பொலநறுவை எல்லைப் பகுதியில் படையினரும் முஸ்லிம் கும்பல்களும் நடத்திய தாக்குதலில் 50 தமிழர்கள் பலியாகியுள்ளனர்.

புன்னாணைப் பகுதியில் தமிழர்களின் எல்லைக் குடியிருப்பு ஒன்றினுள் நுழைந்த ஸ்ரீலங்காப் படையினர் அவர்களுடன் கதைக்க வேண்டும் எனக்கூறி நூற்றுக்கணக்கான தமிழ் மக்களை கூட்டிச் சென்றனர்.

இவ்வாறு ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்ட மக்கள் மீது படையினர் சுட்டும் வெட்டியும் நடத்திய கொடூரத்தினால் 50 தமிழர்கள் பலியாகினர்.

காயங்களுடன் தப்பிய பல பொதுமக்கள் இங்கிருந்து சிதறி ஓடினர். இவர்களின் நிலை குறித்து இதுவரை எதுவும் தெரியவரவில்லை.

## வெள்ளவத்தையில் எரிகுண்டு பொலிஸார் உஷார் நிலையில்

வெள்ளவத்தைப் பகுதியில் நேற்று கும்பல் ஒன்று தீக்குண்டுகள் வீசியதில் ஒரு முடி திருத்தும் கடை சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை.

கண்ணி வெடியில் பலியானவர்களின் மரணச்சடங்குகள் நேற்று நடைபெற்றதை முன்னிட்டு கொழும்பு நகரில் இனக்கலவரங்கள் வெடிக்கலாம் என பலத்த பாதுகாப்பு உஷார் படுத்தப்பட்டிருந்தது.

கொழும்பில் தமிழர்கள் வாழும் இடங்களில் பாதுகாப்பு

களின் மரணச்சடங்குகள் நடைபெற்ற வண்டி, நீர்கொழும்பு மாத்தளைப்பகுதிகளிலும் நேற்று பதற்றநிலை நிலவியதாக செய்திகள் தெரிவித்தன.

எனினும் கொழும்பில் அமைதி நிலை காணப்படுவதாக பி.

## தம்புல்லவில கட்டிடங்களுக்கு அதிகாரிகளின் பெயர்

கண்ணிவெடியில் பலியான வடபகுதியின் மூன்று இராணுவ அதிகாரிகளின் பெயர்களை ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று தம்புல்லவில் மூன்று கட்டிடங்களுக்கு இட்டார்.

இனாமலுவ மகாவித்தியாலயத்திற்கு மேஜர் ஜெனரல் விஜய விமலரட்னவின் பெயரும் தம்புல்ல ஆஸ்பத்திரிக்கு டென்சில் கொப்பேகடுவவின் பெயரும் படுலகம கனிஷ்ட மகாவித்தியாலயத்திற்கு மேஹான் ஜயமஹாவின் பெயரும் இடப்பட்டன.

## சுப்பர் சோனிக் விமானங்கள் யாழ். நகரை வட்டமிட்டன

நாவற்குழியில் குண்டுவீச்சு தாக்குதலை நடத்திய சுப்பர் சோனிக் விமானங்கள் இரண்டும் நேற்றுக்காலை யாழ் நகரப்பகுதியை வட்டமிட்டுச் சென்றன.

இதனால் இப்பகுதியில் மக்கள் பெரும் பதற்றமடைந்து காணப்பட்டனர்.

வீதியால் சென்று கொண்டிருந்தவர்கள் மரங்களின் கீழ் பதுங்கியதையும் காணமுடிந்தது. 47

போட்டி, மரதன் ஓட்டப் போட்டி ஆகியவற்றுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப பத்திரங்களை அவ்வவ் வட்டப் பிரதேச விளையாட்டுப் பொறுப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம். போட்டியாளர்கள் 15 ஆம் திகதிக்கு முன்னதாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை விளையாட்டுப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

[illegible] வாழும் [illegible] இல்லை

கண்ணி வெடியில் பலியான உயர் இராணுவ அதிகாரிக

கொழும்பில் தமிழர்கள் வாழும் இடங்களில் பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இதே சமயம் சில அதிகாரி

நிலை காணப்படுவதாக பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

# குடிமனைகள் மீது குண்டுவீச்சு

## பெண் பலி! நால்வர் காயம், 15 வீடுகள் சேதம்

யாழ்ப்பாணப் பகுதியை நேற்றுக்காலை 6-35 மணியளவில் வட்டமிட்டு மக்களை அச்சுறுத்திய இரு சுப்பர் சொனிக் குண்டு வீச்சு விமானங்கள் நாவற்குழி குடியிருப்புப் பகுதியை நோக்கி குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

இதனால் இளம் குடும்பப் பெண் உடல் சிதறிப் பலியானார். இவரது கணவன் பிள்ளைகள் உட்பட ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமுற்றனர்.

நாவற்குழியைச் சேர்ந்த திருமதி ஈஸ்வரி சின்னத்துரை (28 வயது) என்பவரே உடல் சிதறிப் பலியானார்.

இவரது கணவரான சந்திரன் சின்னத்துரை (31 வயது) பிள்ளைகளான சி. ராஜீவ் (9), சி. ராஜியா (7), சி. றஜ்னி (5) என்பவர்களே காயமடைந்தவர்களாவர்.

நாவற்குழி கண்டி வீதியி

... 4 ஆம் பக்கம் பார்க்க

## ★ புலிகளுடன் பேசுவதற்கு தமிழ்க் கட்சிகள் உடன் வருவதை தொண்டமான் விரும்பவில்லை

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமிழ்க் கட்சிகளும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் முன்வைத்துள்ள நான்கு அம்சத் திட்டம் சம்பந்தமாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த தாம் யாழ்ப்பாணம் செல்லும் போது ஏனைய தமிழ்க் கட்சிகளும் அவருடன் கூடச்செல்ல வேண்டும் என்ற ஆலோசனையை சுற்றுலாத்துறை அமைச்சர் எஸ். தொண்டமான் நிராகரித்துள்ளார்.

'அரசாங்கமோ தமிழ்க் கட்சிகளோ விடுதலைப் புலிகளுடன் பேசுவதானால் ஏகவது நோக்கம் இருக்க வேண்டும். இது வெறும் கோயில்

... 4 ஆம் பக்கம் பார்க்க

## காவல் துறையினரிடம் நீதிமன்ற விசாரணைகள்

தமிழீழ இணக்கமன்றுகள். ஆரம்ப நீதிமன்றுகள் யாவும் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து இம்மன்றுகளினால் விசாரணை செய்யப்பட்டு வந்த பிணக்குகள் யாவும் தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பிணக்குகள் யாவும் காவல்துறையினரால் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்படும் என காவல்துறை பொறுப்பாளர் பா. நடேசன்

... 4 ஆம் பக்கம் பார்க்க

காட்டின் மரம் உயர
நாட்டின் தரம் உயரும்

2300 ரூபாவரை மாதாந் தச் சம்பளம் பெறும் அர சாங்க ஊழியர்களுக்கு கடந்த வரவு செலவுத் திட் டத்தில் அறிவிக்கப்பட்ட 300 ரூபா விசேட படியை வழங்குவதற்கு அரசு ஆலோ சித்து வருகிறது.

இது குறித்து அமைச்சரவை விரைவில் ஆராய்ந்து முடிவு எடுக்குமெனவும் தெரிவிக்கப் படுகிறது

## நான்கு பயங்கரக் கைதிகள் ஹெலிக்கொப்டரில் தப்பினர்

பிரான்ஸில் மார்ஸெல்ஸில் உள்ள அதிபாதுகாப்புடன் கூடிய சிறையில் இருந்து நான்கு பயங்கரக் கைதிகள் ஹெலிக்கொப்டர் ஒன்றில் தப் பிச் சென்றுள்ளனர்.

சாலையில் கைதிகள் உடற் பயிற் யிலீடுபட்டிருந்த சம யம் சிறைச்சாலை வளவுக்கு மேலாகப் பறந்த ஹெலிக் கொப்டரிலிருந்து கயிறு ஏணி ஒன்று கீழ போடப்பட்டு அதன் மூலம் அந்த நான்கு கைதிகளும் சிறைமீட்கப்பட் டதாகவும் மேலும் தெரிவிக் கப்படுகிறது.

## தொகுதி அபிவிருத்தி நிதி இனி எம். பிக்களுக்கு இல்லை!

தொகுதி அபிவிருத்திக்காக வருடா வருடம் வரவுசெல வுத்திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதி இனிமேல் அந்தந்தத் தொகுதி உறுப்பினர்களுக்கு வழங்கப்படமாட்டாது

மாறாக அந்த நிதியொதுக் கீடு இனிமேல் மாவட்டங் களுக்கு ஒதுக்கப்பட்டு அவை உதவி அரசாங்க அதிபர் பிரி வுகளுக்குப் பகிர்ந்தளிக்கப் படவுள்ளன.

ஒவ்வொரு வரவு செலவுத் திட்டத்திலும் தொகுதி ஒவ் வொன்றுக்கும் தலா 25 லட் சம் ரூபா ஒதுக்கப்பட்டு அவை இதுவரை அந்தந்த தொகுதி உறுப்பினர்களின் மூலமாகவே செலவழிக்கப் பட்டுவந்தன.

பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

அக்டோபர் இரண்டாம் திகதி முதல் ஐந்தாம் திகதி வரை சிட்னியில் நடைபெற வுள்ள இம்மாநாடு நாடு ...ணைப்புக் குழுவும் மலேசிய உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகமும் நியூஸிலாந்துக் கிளை யின் தமிழ் அமைப்புகளும் ஏற்பாடு செய்துள்ளன.

## அமெரிக்க யுத்த விமானம் வளைகுடாவில் விழுந்து நொருங்கியது

வளைகுடாப் பகுதியில் அமெரிக்க போர் விமான மொன்று விழுந்து நொருங்கிய தில் இரு அமெரிக்க விமானப் படை விமானிகள் உயிரிழந்த னர்.

வளைகுடாப் பகுதியில் ஈராக்குடன் போர் ஒத்திகை யில் ஈடுபட்டிருந்த அமெ ரிக்க யுத்த விமானமே இது வெனவும் கூறப்படுகிறது.

## முக்கூட்டுப் பசளையை வழங்குவதற்கு ஏற்பாடு

காலபோக நெற் செய்கைக் கான தயாரிப்பு வேலைக ளில் யாழ் மாவட்ட விவசா யிகள் ஈடுபட்டு தயாராகி யுள்ளதாக விவசாயப்பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

பருவமழையைத் தொடர்ந்து உழவுவேலைகள் ஆரம்பமாகும் விவசாயிகளுக்குத் தேவை யான முக்கூட்டுப் பசளையை தருவித்து வழங்குவதற்கான நடவடிக்கையினை விவசாயப் பகுதி உற்பத்திக்குழுக்களு டன் இணைந்து மேற்கொண் டுள்ளது.

## புதுவிதமாக அறிவிப்பு!

சென்னையில் சுவரொட்டி கள் ஒட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதையடுத்து தி மு க தனது பொதுக் கூட் டங்கள் பற்றி தற்பொழுது புதுமையான விதத்தில் அறி விப்புச் செய்து வருகிறது.

பொதுக் கூட்டம் பற்றிய பெரிய சுவரொட்டிகளை அட்டைகளில் ஒட்டி தி.மு.க. தொண்டர்கள் அவற்றை மூலை முடுக்கெல்லாம் எடுத் துச் சென்று இப்போது அறி விப்புச் செய்து வருகின்ற னர்.

## ஆசிரியர் இடமாற்ற விவகாரத்தை நீதிமன்றம் எடுத்துச் செல்ல முயற்சி

வெளிமாவட்டங்களில் கட் டாய சேவையை முடித்துக் கொண்ட தமிழ் ஆசிரியர் களை அவர்களது சொந்த மாவட்டங்களுக்கு இடம் மாற்ற நடவடிக்கை எடுக்கு மாறும் தவறின் இவ் விடயத் தில் நீதி கோரி அடிப்படை உரிமை மீறல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய நிலை உருவாகும் என இலங்கைத் தமிழர் ஆசி ரியர் சங்கம் கல்விச் சேவை கள் ஆணைக்குழுவிற்கு கடித மூலம் அறிவித்துள்ளது

யாழ்ப்பாணம், மட்டக்க ளப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கு எனத் தெரிவு செய்யப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் பலர் 3 வருட வெளிமாவட்ட கட்டாய சேவையை முடித்துக்கொண் டுள்ள போதிலும் அவர்களை இன்னமும் தமது சொந்த மாவட்டங்களுக்கு இடமாற் றம் செய்யப்படவில்லை

இந்த ஆசிரியர்களை அவர் களது சொந்த மாவட்டங்க ளுக்கு இடமாற்றம் செய்ய வேண்டிய பொறுப்பிலிருந்து கல்விச் சேவைகள் குழு தவ றிவிட்டது எனவும் அக் கடி தத்தில் குற்றம் சாட்டப்பட் டுள்ளது. (26)

## அரியாலை அணி வெற்றி பெற்றது

கொய்யாத்தோட்டம் சன சமூக நிலையம் நடத்தும் 20 ஓவர்களுக்கு மட்டுப்படுத் தப்பட்ட மென்பந்து கிரிக் கெட் போட்டியில் நேற்று முன்தினம் ஈச்சமோட்டை யாக்குள மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளை யாட்டுக்கழக அணி, விக்டறி விளையாட்டுக்கழக அணியை 41 ஓட்டங்களால் வென் றது. 16

## அதிர்ச்சி தெரிவிப்பு

கொப்பேகடுவ உட்பட முக்கிய இராணுவ அதிகாரிகள் பலர் வடக்கில் விடுதலைப் புலிகளினால் கூண்டோடு அழிக்கப்பட்டிருப்பது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிர்ச்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், தேசிய பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் அதேவேளையில் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தையே தீர்வாக அமையும், என்று தெரிவித்துள்ளது.

## புளட்டும் கவலை தெரிவிப்பு

சிறந்ததொரு இராணுவத் தளபதியை நாடு இழந்து விட்டதென புளொட் இயக்கத் தலைவர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். இவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வவுனியாஎல்லைப்பகுதியில் கொந்தளிப்பு நிலை

காவலூர்ப் பகுதியில் கடந்த சனிக்கிழமை முக்கிய படை அதிகாரிகள் கொல்லப்பட்டதன் எதிரொலியாக வவுனியா எல்லைப் பகுதியில் கொந்தளிப்பு நிலை காணப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து வவுனியா நகர்ப்பகுதியில் தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## தெற்கில் எங்கும் வெள்ளைக்கொடி கட்டி அஞ்சலி

கொப்பேகடுவ உட்பட கொல்லப்பட்ட முக்கிய படை அதிகாரிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தெற்கின் சகல பகுதிகளிலுமுள்ள நகரங்கள், கிராமங்கள், வீதிகள், வீடுகள் யாவற்றிலும் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவை தவிர வீதிகளில் செல்லும் வாகனங்களிலும் அதிக வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

... கான மாதாந்த உதவிப் பணம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

சண்டிலிப்பாய், ஆனைக்கோட்டை உப-தபால் அலுவலகப்பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு மேற்படி உப-தபாலகங்கள் மூலமும், ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு அவ்வப் பிரிவுக் கிராமசேவை அலுவலர்கள் மூலமும் இந்த உதவிப் பணம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 13

## கோழி முட்டைகள் விநியோகம்

நல்லின கோழி வளர்ப்பினை ஊக்குவிக்கும் முகமாக அடைவைப்பதற்கேற்ற நல்லின கோழி முட்டைகள் தற்போது யாழ் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கிராமிய மட்டத்தில் கோழி வளர்ப்பினை விஸ்தரிக்கும் திட்டத்தின் கீழ் வடமராட்சிப் பகுதியில் உள்ள கோழிப் பண்ணையில் மாதம் ஒன்றுக்கு 2,000 வரையிலான ரீ-8, டபிள்யூ-8 நல்லின கோழி முட்டைகள் அடைவைப்பதற்கென விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் சுன்னாகம் காமதேனு பண்ணையிலும் அடைவைப்பதற்கேற்ற நல்லின கோழி முட்டைகள் விநியோகிக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

... புலிகளின் உயர்மட்டத் தளபதிகள் புலேந்திரன் குமரப்பா உட்பட பன்னிரண்டு போராளிகள் சயனைட் அருந்தி மரணமடைந்த போது தமிழீழ மக்களும் இதே போன்று துயரப்பட்டிருப்பர் என்பதை ஸ்ரீலங்கா சிங்கள பேரினவாதம் உணர வேண்டும்.

மரணங்கள் நிச்சயமாக தவிர்க்கப்பட வேண்டும். என்பதில் யாருக்கும் இருகருத்து இல்லை. அதேபோல அழிவுகளும் தவிர்க்கப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரமரணத்தை தழுவிக் கொள்ளும். ஒவ்வொரு விடுதலைப் புலி போராளியின் உயிரும் பொன்னானது இதை எல்லோரும் உணர்ந்துதான் இருக்கின்றனர்.

இந்த நாட்டில் நடந்து கொண்டிருக்கும் போரை முடிவுக்கு கொண்டு வரும் பொறுப்பு நிச்சயமாக ஜனாதிபதி பிரேமதாச விடமும் ஐ.தே.க அரசிடமுமே உள்ளது.

பொதுவான புரிந்துணர்வின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதே அரசின் குறிக்கோள் என ஜனாதிபதி கூறியுள்ளார் மேலும் இனப்பிரச்சினைக்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவும் சர்வ கட்சி மாநாடும் தீர்வுக்கு

...

தேசிய அரசியல் தீர்வு என்று கூறிக்கொண்டு இராணுவ நடவடிக்கைகளையும் அரசுதான் மேற்கொள்கிறது.

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தாம் தயார் என விடுதலைப்புலிகள் எப்பொழுதுமே கூறி வந்துள்ளனர்.

இதன் அடிப்படையில் ஜனாதிபதி பிரேமதாஸவை பேச்சுவார்த்தை நடத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவிடாது தடுப்பதில் லலித் அத்துலத் முதலியின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் சுதந்திரக் கட்சியும் ஏனைய சில எதிர்க்கட்சிகளும் முனைப்பாகவுள்ளன

இதற்கு அவர்கள் உபயோகிக்கும் துரும்பு ஜனாதிபதி பிரேமதாஸ விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கினார் என்ற குற்றச்சாட்டாகும்.

ஜனாதிபதி இதற்குப்பயந்து கொண்டிருந்தால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது 1990 ஜூன் மாதத்திலிருந்து இதுவரை எத்தனை ஆயிரம் ஆயுதங்களை சிறீலங்கா ஆயுதப்படைகள் விடுதலைப்புலிகளிடம் பறிகொடுத்துள்ளனர். இதை யார் கேட்பது?

ஜனாதிபதியும் ஐ.தே.க. அரசும் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவோம்

... டிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது அதனாலேயே இராணுவ நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதவும் இடமுண்டு. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து மீட்கப்பட்ட ஊர்காவற்றுறையில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கையிலேயே டென்சில் கொப்பேகடுவவும் ஏனையோரும் கொல்லப்பட்டனர் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

இக்கூற்றை குடாநாட்டுக்கு சிவில் நிர்வாகக் குழு அமைக்கப்படும் என்ற செய்தி உறுதி செய்கிறது.

இது அரசியல் தீர்வு என்று கூறிக்கொண்டு இராணுவத் தீர்வில் அரசு அக்கறை காட்டுவதையே வெளிப்படுத்துகின்றது. யாழ். நகரத்தின் மீதான தாக்குதல் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களை பலியெடுக்கும் என்பதை அரசு உணரவேண்டும், இந்த நாட்டில் மரணங்கள் தவிர்க்கப்படவேண்டுமானால் இராணுவ நடவடிக்கை இராணுவ தீர்வு என்ற அணுகுமுறைக்கு அரசு முழுக்குப்போட்டு விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும் இதற்கான முன்முயற்சி அரசிடமிருந்தே வரவேண்டும் அரசின் பொறுப்பும் கடமையும் இதுவே.

# மண்டபம் அகதிகள் முகாமிற்கு ஐ. நா. அதிகாரி விஜயம்

இராமநாதபுரம் மண்டபம் அகதிமுகாமிற்கு அகதிகளுக்கான ஐ. நா அதிகாரி சென்றதற்கு முன்னதாக தமிழக அரசு அனுமதி அளிக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

எனினும் அவர் பின்னர் ரயில் மூலம் மண்டபத்தை சென்றடைந்தார். மண்டபம் அகதிமுகாமில் வசிக்கும் பலர் தாம் இம்முகாமில் மிரட்டப்படுவதாகவும், பலவந்தமாகத் தம்மை திருப்பியனுப்ப அதிகாரிகள் முயற்சிப்பதாகவும், தம்மை மண்டபம் முகாமிலிருந்து வேறு இடத்துக்கு மாற்ற உதவுமாறும் அவ்வதிகாரியை கோரியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெண் ஒருவரும் குடும்பம் ஒன்றும் தாம் பலவந்தமாக அனுப்பப்படுவதாக ஐ. நா. அதிகாரிகளிடம் முறையிட்டதையடுத்து அவர்களை தொடர்ந்து இந்தியாவில் தங்கியிருக்க ஐ நா. அதிகாரிகள் ஏற்பாடு செய்தனர்.

தாயகம் திரும்ப விரும்புவோரே அனுப்பப்படுவர் என்ற மத்திய அரசின் செய்தி அடங்கிய பத்திரிகை துண்டை அகதிமுகாமில் சகலரின் பார்வைக்காக ஒட்டிய ஒருவரை அதிகாரிகள் கடுமையாக மிரட்டியதாகவும் கூறப்படுகிறது.

## சிறிமாவோ திரும்பிய பின்பே சுதந்திரக் கட்சிதேர்தல்கள்

சுதந்திரக் கட்சியினுள் நிலவி வரும் உள்கட்சிப் போராட்டத்தைத் தீர்த்து வைப்பதற்கு சென்றவாரம் 16 சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்டகுழு ஒன்று கூடியது.

மலேசியாவில் இருந்து சிறிமாவோ வரும் வரை கட்சித் தேர்தல்கள் நடத்தக் கூடாதெனவும் தேர்தல்கள் ஒக்டோபர் மாதத்தில் வைத்தல் வேண்டுமெனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதேவேளை அனுரவின் ஆதரவாளர்கள் பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் சென்ற புதன்கிழமை கூடிதேர்தலில் போட்டியிட உள்ளவர்களைத் தெரிவு செய்ததாகத் தெரிகிறது. தேர்தல்கள் முன்னுக்கு நடைபெறும் பட்சத்தில் தயார் நிலையில் இருப்பதற்கே இப்படிச் செய்யப்பட்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

## காமினி அத்துலத் கட்சியில் உட்பூசல் உருவாகிறது

புதிதாக உதயமாகிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்குள்ளும் உறவுகள் சுமுகமாக இல்லையெனத் தெரிகிறது.

லலித் அத்துலத்முதலி நாட்டின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதாக சூசகமாகத் தெரிவித்து வருகிறார்.

இது காமினி திசநாயக்கின் விசுவாசிகளை அதிருப்தியடையச் செய்துள்ளது. கட்சிப் பத்திரிகை தொடர்பாகவும் முரண்பாடுகள் எழுந்துள்ளன. கட்சியின் உத்தியோகபூர்வமான பத்திரிகையான 'ரசஜாலிய' ஜீ எம் பிரேமச்சந்திரனின் கட்டுப்பாட்டில் உள்ளது.

எனினும் லலித் அத்துலத்முதலியின் ஆதரவாளர்கள் தனியாக சிங்கள வார இதழ் ஒன்றையும் ஆங்கில வார இதழ் ஒன்றையும் வெளியிட ஆரம்பித்துள்ளனர்.

முரண்பாடுகளில் முன்னாள் நிதியமைச்சர் றொனி டிமெல் கட்சியில் சேர்வது பற்றியது எனக் கூறப்படுகிறது. காமினி திசநாயக்க இதை ஆதரித்த போதும் அத்துலத்முதலி இதற்கு ஆதரவளிப்பதை தவிர்த்து வருவதாகவும் தெரிகிறது. எனினும் றொனி டிமெலின் நிலையை அவர் இன்னும் வெளிப்படுத்தவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

★ மேல், மத்திய மாகாணசபை

## முதலமைச்சர் பதவிக்கு லலித், காமினி போட்டி

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மாகாண சபைகள் தேர்தலில் ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தலைவர்கள் மூன்று மாகாணங்களின் முதலமைச்சர் பதவிகளுக்கு போட்டியிடவுள்ளனர்

திரு. லலித் அத்துலத்முதலி மேல் மாகாணசபை முதலமைச்சர் பதவிக்கும் திரு காமினி திசாநாயக்க மத்திய மாகாண சபை முதலமைச்சர் பதவிக்கும் திரு. ஸ்ரீ எம் பிரேமச்சந்திர வடமேல் மாகாண சபை முதலமைச்சர் பதவிக்கும் போட்டியிடுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிரணிக் கட்சிகளின் முன்னணி ஒன்றை உருவாக்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் காலவரையின்றி ஒத்திப்போடப்பட்டுள்ளது.

## தாக்குதல் தளர்வுக்கு திருவிழா பரீட்சை காரணமாம்

விடுதலைப் புலிகளுக்கு எதிராக யாழ். குடா நாட்டின் மீது இராணுவத் தாக்குதல்கள் தளர்த்தப்பட்டதற்கு நல்லூர் திருவிழாவும், க.பொ.த

டாரங்கள் தெரிவித்ததாக ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

நல்லூர் திருவிழாவும் பரீட்சையும் இம்மாதம் முடியும்

## தற்போதைய நிலை தி.மு.கவுக்கு சாதகமாகலாம் - வாழப்பாடி

தமிழகத்தில் கூட்டுறவுத் துறை தேர்தல்களை ஒத்தி வைக்குமாறு தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் முதலமைச்சர் ஜெயலலிதாவைக் கேட்டுக்கொண்டுள்ளார்

தற்போது இத்தேர்தல்களை நடத்தினால் அது தி. மு கவுக்கு சாதகமாகிவிடும் எனத் தான் கருதுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## ஒற்றையாட்சி முறைக்குப் பதில் சமஷ்டி ஆட்சி பரிசீலனையில்?

தற்போதுள்ள ஒற்றையாட்சி முறைக்குப் பதிலாக சமஷ்டி ஆட்சி முறை ஆலோசிக்கப்படுவதாகவும் மங்கல முனசிங்க தலைமையிலான தெரிவுக்குழுவில் இவ்விடயம் ஆராயப்படும் எனவும் தெரியவருகிறது.

இத்தெரிவுக்குழு இன்று 11 ஆம் திகதி கூடவிருக்கிறது.

தெரிவுக்குழு நல்ல தீர்வைக் காணும் என நம்பிக்கை வைத்துள்ளவர்கள் இதன் கூட்டத்திற்கு சமீப காலமாக அங்கத்தவர்கள் சமுகமளிப்பது குறைந்துள்ளதையிட்டு அதிருப்தியடைந்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன

## செப்ரெம்பர் முதல் வாரத்தில் ஜனாதிபதி தேர்தல் வழக்கு 'தீர்ப்பு

ஜனாதிபதித் தேர்தல் மனு மீதான தீர்ப்பு செப்ரெம்பர் மாதம் நான்காம் திகதிக்கு முன்பு வழங்கப்படலாம் என நம்பப்படுகிறது இரு நீதிபதிகள் தீர்ப்பு எழுதுவதில் ஈடுபட்டுள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

பிரதம நீதியரசரும் நீதியரசர் அமரசிங்கவும் நைஜீரியாவில் நடைபெறவுள்ள நீதிபதிகள் மாநாட்டிற்குச் செல்வதற்கு செப்ரெம்பர் நாலாம் திகதி இலங்கையில் இருந்து புறப்படவிருக்கின்றனர் சுமார் மூன்று வார காலம் இவர்கள் வெளிநாட்டில் தங்கியிருப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதம நீதியரசர் ஸ்ரீ பி எஸ். டி. சில்வாவும் நீதியரசர் குணவர்த்தனாவும் இவ்வழக்கின் தீர்ப்பு வழங்கப்படும்வரை நீதிமன்ற அமர்வுகளில் பங்கேற்கமாட்டார்கள் எனவும் தெரிகிறது

இதனிடையில் ஜனாதிபதி பிரேமதாசா சார்க் நாடுகள் அமைப்பின் தற்போதைய தலைவர் என்ற வகையில் அந்நாடுகளுக்கான விஜயமொன்றை செப்ரெம்பர் முதல் வாரத்தில் ஆரம்பிக்கவுள்ளார்.

மேலும் இவ்வழக்கின் மனுதாரரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க வைத்திய சிகிச்சைக்காக ஆகஸ்ட் பதினெட்டாம் மலேசியா பயணமாகின்றார்,

---

பீரங்கி...

வந்த ஒரு சில சிங்கள மக்கள் ரூபவாஹினியால் பேட்டி காணப்பட்டனர். இவர் பேட்டி வழங்கும் போது தளு

---

கொப்பேகடுவ...

லின் இறுதிச்சடங்கு கொழும்பிலும் விஜயபுரவில் மரணச்சடங்குகள் நடைபெற

★ சந்திரிகா குமாரணதுங்க

## சமஷ்டியை பண்டா ஆதரித்தார் வட,கிழக்கு இணைப்புக்கு எதிரல்ல

"இந்த நாட்டுக்கு சமஷ்டி அமைப்பு உகந்தது என எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க சுதந்திரத்துக்கு முன்பே கூறியிருந்தார் 1954 ஆம் ஆண்டுவரை தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து வழங்க வேண்டுமென்றும் அவர் கூறியிருந்தார் 1955 இல் பொதுத் தேர்தலுக்காக மக்கள் ஐக்கிய முன்னணியுடன் சுதந்திரக்கட்சி சேர்ந்து கொண்டபோதே சிங்களம் மாத்திரம் என்ற கொள்கையை முன்வைத்தார்

ஹெல உறுமய குழுவினர் எனது தந்தையின் கருத்துக்களை தவறாக கூறுகின்றனர்.

இவ்வாறு ஐலண்ட் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் சந்திரிகா குமாரணதுங்க கூறியுள்ளார்,

இவ்விரு பகுதிகளை குறிப்பாக எல்லை நிர்ணயித்த பின்பு கிழக்கின் தமிழ் பகுதிகளை வடக்குடன் இணைப்பதை எதிர்க்கவில்லை கிழக்கு முஸ்லிம்களுக்கென தனியான நிர்வாக அமைப்பு ஏற்படுத்தும் எண்ணம் நல்லது என்றும் கூறினார்

மேலும் கட்சித் தலைமை பதவிக்கு தாம் அனுராவை ஆதரிப்பதாகவும் திருமதி சந்திரிகா கூறினார்

## ஈழத் தமிழர்களை சுவிஸ் திருப்பியனுப்பாது விடலாம்

சுவிற்சர்லாந்து நாட்டிலிருந்து இவ்வருட இறுதிக்குள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படவிருந்த இருநூறு தமிழர்களும் திருப்பியனுப்பப்படமாட்டார்கள் எனத் தெரியவருவதாக ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது

சென்றவாரம் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் நிலைமையை நேரில் அறிந்து கொள்ளவென இலங்கை வந்திருந்தனர்,

விடுதலைப் புலிகள் இயக்கமும் ஏனைய தமிழர்களும் யாழ். குடாநாட்டில் சகஜ நிலை நிலவும் வரை இவர்களைத் திருப்பியனுப்ப வேண்டாம் என இக்குழுவைக் கேட்டுக் கொண்டனர்

இதனால் தமிழர்களைத் திருப்பியனுப்பும் விடயம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் இச்செய்தி கூறுகிறது.

## தமக்கு வழங்கப்பட்ட பட்டங்களை எரிக்க 25 பேர் முயற்சி

தங்களது தமிழாராய்ச்சிப் பட்டங்களை எரிக்க முயன்ற தமிழாராய்ச்சியாளர் பேரவையைச் சேர்ந்த எட்டுப் பெண்கள் உட்பட இருபத்தைந்து பேரைப் பொலிஸார் தமிழகத்தி

---

குடிமகனை ...

லுவன் பெனின்கஸ, தொழிற்

விடுதலைப் புலிகளுக்கு எதிராக யாழ். குடா நாட்டின் மீது இராணுவத் தாக்குதல்கள் தளர்த்தப்பட்டதற்கு நல்லூர் திருவிழாவும், க.பொ.த உயர்தரம் பரீட்சையுமே காரணம் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

நல்லூர் திருவிழாவும் பரீட்சையும் இம்மாதம் முடியும் வரை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சகல பாண் உற்பத்தியாளர்கட்கும்

# கலந்துரையாடல்

இடம்;- விடுதலைப்புலிகள் அரசியல் துறை மாவட்ட செயலகம் கோண்டாவில்.

காலம்:- 12. 08. 1992 புதன்கிழமை காலை 10 மணி

விடயம்:- பாண் உற்பத்தியாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள், இதுவரை சங்கத்தில் பதிவு செய்யப்படாமல் இயங்கும் பேக்கரி உரிமையாளர்கள் சகலரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்கப்படுகின்றனர்

த. சிவசுப்பிரமணியம்.
தலைவர்
பேக்கரி உரிமையாளர் சங்கம்,
யாழ். மாவட்டம்,

08017

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி கல்வியங்காடு யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 11.08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

பீரங்கி...

வந்த ஒரு சில சிங்கள மக்கள் ரூபவாஹினியால் பேட்டி காணப்பட்டனர். இவர் பேட்டி வழங்கும் போது தளுதளுத்த குரலில் பேசியதையும் கேட்கமுடிந்தது.

யுத்தமுனையில் கொல்லப்பட்ட லெப். ஜெனரல் விமலரட்ண மேஜர் ஜெனரல் ஜயமஹா ஆகியோரின் செயற்பாடுகள் குறித்த பழைய துண்டுக் காட்சிகளும் காண்பிக்கப்பட்டன.

தமிழ்க்...

பூசைகள் மாதிரி இருக்கக் கூடாது" எனவும் அவர் தெரிவித்தார்.

"எவ்வாறாயினும் விடுதலைப் புலிகளுடன் நான் ஏற்கெனவே தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளேன். சமாதானத்தை உருவாக்குவதற்கான புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு நான் விடுதலைப் புலிகளுடன் பேசலாம்"

"எல்லாக்கட்சிகளும் விடுதலைப் புலிகளுடன் பேசுவது சமாதானத்தை நிலைநாட்ட உதவுமானால் கூட்டாகப் பேசுவது அர்த்தமுள்ளதாக இருக்கும். ஆயினும் பாராளுமன்றத் தெரிவுக்குழு விவாதங்களின் முடிவு வெளிவரும் வரை நாம் காத்திருக்க வேண்டும்" என்றும் திரு தொண்டமான் கூறினார்.

கொப்பேகடுவ...

வின் இறுதிச்சடங்கு கொழும்பிலும் லெப். விஜயபுரவின் மரணச்சடங்குகள் படைமரியாதையுடன் நீர்கொழும்பிலும், லெப். கேணல் பலிபஹனவின் மரணச்சடங்கு குருநாகலிலும் இடம் பெற்றன. கொமடோர் ஜெயமரணத்துக்குப் பின் பதவி உயர்வு பெற்ற சிப்பாய் விக்கிரமரட்ணவின் மரணச்சடங்கும் இராணுவ மரியாதையுடன் இடம் பெற்றது.

மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ணவின் மரணச்சடங்கு நாளை நடைபெறவுள்ளது.

காவல் –

அறிவித்துள்ளார்

ஏற்கனவே இம்மன்றுகளினால் வழங்கப்பட்ட தீர்ப்புகள் யாவும் காவல்துறையினரால் நடைமுறைப்படுத்தப்படும். வெகுவிரைவில் இச்செயற்பாடுகள் யாவும் தமிழீழ காவல் துறையினரால் ஆரம்பிக்கப்படும்.

இக்கால இடைவெளிக்குள் இம்மன்றுகளினால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள தீர்ப்புகளை உதாசீனம் செய்யும் வகையில் யாராவது செயற்பட்டால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தங்களது தமிழாராய்ச்சிப் படைகளை எரிக்க முயன்ற

குடிமனைகள்..

லுள்ள பெனின்சுலா தொழிற்சாலை பழைய உணவுக் களஞ்சியம். அறாலி பகுதியிலும் தொழிற்சாலைப் பகுதியை அண்டிய குடியிருப்புகளில் எட்டு குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. ஒரு குண்டு வெடிக்கவில்லை.

கட்டிடங்கள், வீடுகள் பலத்த சேதமடைந்தன. கண்டி வீதியில் இரு குண்டுகள் வீழ்ந்து வெடித்ததினால் கிணறு போன்ற ஆழமான கிடங்கு ஏற்பட்டதனால் வாகனம் போய்வர முடியாத நிலையேற்பட்டுள்ளது.

15 அடி ஆழமான வரையிலான கிடங்குகளே ஏற்பட்டுள்ளன.

பனை, தென்னை மற்றும் பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதுடன் மின்கம்பம் ஒன்றும் நிலத்துடன் பெயர்க்கப்பட்டு வீழ்ந்துகிடக்கின்றது.

குண்டு வீச்சுக்களையடுத்து நாவற்குழி மக்கள் நேற்றுக் காலையிலிருந்து இடம் பெயர்ந்து கைதடி நுணாவில் பகுதியை நோக்கி பாதுகாப்பிற்காக சென்றுள்ளனர்.

விமானத்திலிருந்து 8 குண்டுகள் வீசப்பட்டன. ஒரு குண்டு வெடிக்காத நிலையில் புலிகளால் மீட்கப்பட்டது.

தமிழாராய்ச்சியாளர் பேரவையைச் சேர்ந்த எட்டுப் பெண்கள் உட்பட இருபத்தி ஐந்து பேரைப் பொலிஸார் தமிழகத்தில் கைது செய்துள்ளனர்.

தமது தலைமை உரிய வகையில் கௌரவ நியமனங்களில் கணிக்கப்பட வேண்டுமென இவர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

## ஷெல் வீச்சு

# இளைஞர் காயம்

பலாலி முகாம் இராணுவத்தினர் தெல்லிப்பளை குப்பிளான் பகுதி குடியிருப்புக்களை நோக்கி நேற்று பிற்பகல் 4 மணியளவில் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இந்த ஷெல் தாக்குதலில் உரும்பிராய் தெற்கைச்சேர்ந்த இரத்தினம் சுபாகரன் 16 வயது என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரு ஷெல்கள் அப்பகுதியில் வீழ்ந்து வெடித்துள்ளதாக தெரியவருகிறது. 7